<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>MCOP. No.67/2021</u>

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 07–ஆம் நாள் ம.சா.1 சாட்சி திருமதி.பத்மா என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.பத்மா | தொழில் | : |
| த/பெ | : ஜெயசந்திரன் | கிராமம் | : இக்கரை நெகமம் |
| வயது | : | தாலுக்கா | : சத்தியமங்கலம் |

<u>ம.சா.1 : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் 2ம் மனுதாரர் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

21.12.2020ம் தேதியிட்ட சத்தியமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.1209/2020 வழக்கின் முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.1 ஆகவும், 13.01.2021ம் தேதியிட்ட சத்தியமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.1209/2020 வழக்கின் குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2 ஆகவும், TN 36 AM 5154 வாகனத்தின்

மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.3 ஆகவும், சத்தியமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.1209/2020 வழக்கின் மாதிரி வரைபடம் உண்மை நகல் ம.சா.ஆ.4 ஆகவும், சத்தியமங்கலம் காவல் நிலைய குற்ற எண்.1209/2020 வழக்கின் பார்வை மகஜர் உண்மை நகல் ம.சா.ஆ.5 ஆகவும், லோகேஷ்வரனின் விபத்து பதிவேடு உண்மை நகல் ம.சா.ஆ.6 ஆகவும், லோகேஷ்வரனின் சடலக்கூராய்வு அறிக்கை உண்மை நகல் ம.சா.ஆ.7 ஆகவும், லோகேஷ்வரனின் கனரக ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.8 ஆகவும், லோகேஷ்வரனின் இறப்பு சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.9 ஆகவும், லோகேஷ்வரனின் வாரிசு சான்றிதழ் நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.10 ஆகவும், 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.11 ஆகவும், 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.12 ஆகவும், 1ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.13 ஆகவும், 2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.14 ஆகவும், 1ம் மனுதாரரின் நிரந்தர வருமான வரி அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.15 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.